## MARKING SCHEME

## மதிப்பெண் வழங்குமுறை

## பன்னிரண்டாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் (2021 - 2022)

## XII STD SAMPLE QUESTION PAPER (2021 -2022)

## தமிழ் (106) பருவம்:2 ( TAMIL, TERM-2 )

**காலஅளவு :2 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 40**

**Time allowed : 2 Hrs** **Maximum marks:40**

I. **<u>பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் மூன்றனுக்குக் குறுகிய விடை எழுதுக</u>.** **3x2=6**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

1. படிமம் என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம். காட்சித்தன்மை கொண்ட ஒன்றை அப்படியே காணும் வகையில் வெளியிடுவதன் மூலம் தெளிவை ஏற்படுத்தலாம்; ஓவிய அனுபவத்தைத் தரலாம்; புதிய முறையில் தோற்றக் கூறுகளை எடுத்துக்காட்டலாம். கருத்துத் தன்மையுள்ள ஒன்றுக்கு ஒப்பீட்டைக் காட்டிக் காட்சித்தன்மை தரலாம்; கருத்துகளைப் புரிய வைக்கலாம். காட்சிக்குத் தெளிவு தருவதும் கருத்தைக் காட்சிப்படுத்துவதும் படிமத்தின் பணிகள்.

2. எழுதும்போதோ பேசும்போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும் தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவதும் படிப்போர்க்கும் கேட்போருக்கும் பொருள் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்

| | |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது | எம்மொழியார்க்கும் எளிது |
| அப் பாவின் நலங்காண்க | அப்பாவின் நலங்காண்க |
| ஐந்து மாடிவீடு | ஐந்துமாடி வீடு |

3. எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறுபொருளைத் தந்துவிடும்.

அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்

இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும்போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது,

அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்

இத்தொடரில் அந்தப் பெண்ணின் அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள் வேறுபடுவதை அறியலாம்

.

4. தொடர்கள் அமைக்கும் போது தேர்ந்தெடுத்த சொற்களையும் சொற்களுக்குரிய தெளிவான பொருளையும் தொடரமைப்பு மாறாமல் அமைத்தல் வேண்டும்.

" ஆண்டு தோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்"

இத்தொடரில் தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருள் அமையும்படி வந்துள்ளது.

"மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்"

என்றே அமைந்திருத்தல் வேண்டும்.

5. மெய்ப்படிமம்

யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை

குன்றுபுகு பாம்பின் தோன்றும்

மதங்கொண்ட யானையானது தன் வாய்க்குள் பெரிய துதிக்கையின் மூலம் உணவை வைக்கிறது. யானையின் வாய் மலைக்குகையின் வாயினைப் போல உள்ளதாகவும், உணவை எடுத்துச்செல்லும் துதிக்கை, மலைக்குகையில் நுழையும் பாம்பினைப் போல உள்ளதாகவும் வடிவத்தைக் காட்சிப்படுத்தியமை இங்குப் படிமமாகிறது. "கோவைப்பழ மூக்கும் பாசிமணிக் கண்ணும்

## II. <u>பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் குறுகிய விடை எழுதுக</u>. 2x2=4

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

6 .செய்யாமல் செய்த உதவி உலகையும் வானையும் விடப் பெரியது

உற்ற காலத்தில் செய்த உதவி உலகை விடப் பெரியது

பயனை எதிர்பார்க்காது செய்த உதவி கடலை விடப் பெரியது

7. சவரி, இராமனைப் புகழ்ந்து அன்பின் கனிவினால் அருவி இழிவது போலக் கண்ணீர் வடித்தாள். (இராமனைக் கண்டதால்) " என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என்று கூறினாள். வேண்டிய எல்லாம் கொண்டுவந்து அவள் இராம இலக்குவருக்கு விருந்து செய்விக்க, அவர்களும் விருந்தை ஏற்றனர்.

8. இராமன் சுக்ரீவனிடம், "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயவராக இருப்பினும் கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்;

அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; நீ, என் இனிய உயிர் நண்பன்!" என்றான்.

9. பூம்பாவாய்! இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை. அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும். மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறை ஆகுமா?

III. **பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குக் சுருக்கமான விடை எழுதுக.** **2x3=6**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

10. **இந்த மனித இருப்பு** ஒரு விருந்தினர் இல்லம்.ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு.அவை உன்னைத் தயார்படுத்தக்கூடும்.**ஓர் ஆனந்தம்,அவமானம் ,சற்று மனச்சோர்வு, வஞ்சனை சிறிது அற்பத்தனம் எதிர்பாராத விருந்தாளிகளாக** அவ்வப்போது வந்துசெல்லும்.**இவற்றை வாயிலுக்கே சென்று** வரவேற்பாயாக.

**இன்முகத்துடன்** வருபவர் எவராயினும் எல்லாவற்றையும் வரவேற்று விருந்தோம்பு! நன்றி செலுத்து. - **ஏனெனில் ஒவ்வொருவரும் வழிகாட்டியாக** அனுப்பப்படுகிறார்கள் **வெறுமைப்படுத்தும் போதும்,**

.ஒவ்வொரு விருந்தினரையும் **கௌரவமாக நடத்து** புதியதோர் உவகைக்காக.

*11.* குகனொடு ஐவர் ஆனோம். பின்னர் மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம். உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்த்து எழுவர் ஆனோம். புகுதற்கரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி என்னை அனுப்பிய உன் தந்தையாகிய தயரதன், இதனால் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான்.

12.எனக்கு ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்; உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்; பெருமை சான்ற நினது புகழையே நான் பேச வேண்டும்; பொய் பேசாதிருக்க வேண்டும்; சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றுமாறு எனக்கு அருள வேண்டும்; மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்; துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்; என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்; மதியும் நின் கருணையாகிய நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும்;

13. உமணர் ஒருவரின் மகள், அழகும் இளமையும் வாய்ந்தவள். அவள் தன் கைகளில் அணிந்திருந்த அழகிய வளையல்கள் ஒலிக்கத்தெருவில் கைகளை

வீசி நடந்து சென்றாள். அங்கு 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ!' என்று கூவினாள். அவள் கூவுவதைக் கேட்டு வீட்டில் உள்ள நாய் இது வேற்றுக் குரலென்று குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன..

IV. **<u>பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடை எழுதுக</u>.** **2x5=10**

**பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

14. தாய்வழிக் குடும்பம்

சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம். 270) செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன் (புறம். 276) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம். 277) முளரிமருங்கின் முதியோள் சிறுவன் (புறம். 278) என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்** (கலி. பாலை )

முதலான தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டது. இவனது மகன் எனக் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. இவை அனைத்தும் சங்ககாலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை (Matrilocal) இருந்துள்ளது. திருமணத்திற்குப் பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது (அகம்).

15.குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது; குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்கு மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்ததில்லை.

குடும்பு எனும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக (Semantic extension) 'குடும்பம்' எனும் சொல் அமைந்தது. பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

இரவுக் குறியே இல்லகத் துள்ளும் மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே மனையகம் புகாஅக் காலை யான"

16.சென்னையின் தொன்மை

இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப்பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன. சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி, அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது. அங்கு ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை

மனித நாகரிகத்தின் முதன்மையானகளங்களில் ஒன்று எனலாம். பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கோடரிஅகழ்வாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. தென்னிந்தியாவின் கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல்

போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும்

தொல் பழங்கால மானுட எச்சங்கள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்.

இப்பகுதியின் பழமையை நமக்கு உணர்த்துகின்றன

17.நகரம் - உருவாக்கம்

செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' (White's Town) என்று அழைக்கப்பட்டது. கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' (Black's Town) என அழைக்கப்பட்டது. இவ்விரு பகுதிகளும் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது. கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்த காரணத்தால், இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். அவர்களால் வண்ணாரப்பேட்டை(வண்ணத்துக்காரன் பேட்டை) , சிந்தாதிரிப்பேட்டை (சின்னதறிப்பேட்டை) முதலான புதிய பகுதிகள் தோன்றின. ஏற்கெனவே இருந்த எழும்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்களும் இணைக்கப்பட்டன.

V. **<u>பின்வரும் துணைப்பாடப் பொருண்மைகளுள் ஒன்று குறித்து விரிவாக எழுதுக</u>.** **(5)**

**18. உரிமைத்தாகம் -கதைச்சுருக்கம்**

**ஒரு பக்க அளவில் எழுதப்படும் பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

**19.முகவரி இழந்த தலைக்குளம்**

**ஒரு பக்க அளவில் எழுதப்படும் பிழையற்ற முழுமையான விடைக்கு முழு மதிப்பெண் வழங்குக.**

VI. **20.பின்வரும் உரைநடைப் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக.** **(4)**

தலைப்பு -½

திருந்தாப் படிவம் -1

திருந்திய படிவம்- 1

உள்ளடக்கம் 1½

VII. **ஒன்றுபற்றிக்கடிதம்எழுதுக.** **1x5=5**

**21..நட்பு முறைக்கடிதம்**

இடம், தேதி- ½

**விளி**- -½

நலம் கேட்டல்-½

உள்ளடக்கம் 2½

முடிப்பு- ½

உறைமேல் முகவரி -½

22.அலுவல் முறைக் கடிதம்

**அனுப்புநர்**- ½

**பெறுநர்**- ½

**விளி**- -½

**பொருள் -½**

உள்ளடக்கம் 1½

இடம், தேதி- ½

முடிப்பு- ½

உறைமேல் முகவரி -½